**சுருக்கம்**

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – அறிவிப்புகள் – அரசு போட்டித் தேர்வுகள் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் ஏனைய அரசு தேர்வாணையங்கள் நடத்தும் போட்டித் தேர்வு – மாற்றுத்திறனாளிகள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்று வேலைவாய்ப்பு பெறுதல் – சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துதல் – ரூ.12,90,000/- நிதி ஒதுக்கீடு செய்தல் ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத்திறனாளிகள் நல(மாதிந-3(2)த் துறை**

அரசாணை (நிலை) எண்: 20

நாள்: 20.09.2024
குரோதி, புரட்டாசி-4,
திருவள்ளுவர் ஆண்டு, 2055

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 21.06.2024.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க.எண்.2573/பணியமர்த்தல்/2024, நாள் 08.07.2024.

********

**ஆணை:-**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரில் 21.06.2024 அன்று நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

> **"அரசு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் ஏனைய அரசு தேர்வாணையங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் மாற்றுத்திறனாளிகள் அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்று வேலைவாய்ப்பு பெறும் வகையில், ஆண்டுதோறும் 200 மாற்றுத்திறனாளிகளுக்கு உணவு மற்றும் தங்கும் விடுதி வசதியுடன் கூடிய சிறப்பு பயிற்சி வகுப்புகள் முதற்கட்டமாக சென்னையில் துவங்கப்படும்"**

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வரும் நிலையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட பணியமர்த்தும் முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு மாற்றுத்திறனாளிகள் பங்குபெற்று வெற்றி பெற ஏதுவாக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும்

(த.பி.பா.)

Padasalai.Net

தகுதியான 200 மாற்றுத்திறனாளிகளை தேர்வு செய்து போட்டித் தேர்வுகளுக்கான பாடத்திட்டத்தினை (Syllabus) தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு கட்டணம் ஏதுமின்றி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என்றும், இத்துடன் பயிற்சிக்குரிய கையேடுகளை வழங்கி ஆண்டுதோறும் 200 மாற்றுத்திறனாளிகள் பயன் பெறும் வகையில், 3 மாதகால பயிற்சி வகுப்புகளை ஒரு கட்டத்திற்கு 100 மாற்றுத்திறனாளிகள் வீதம் 2 கட்டங்களாக செயல்படுத்தலாம் எனவும், இதற்கென உணவூட்டு மானியம், பயிற்சி புத்தக கையேடு, கட்டிட வாடகை மற்றும் இதர செலவினகளுக்காக ரூ.12,90,000/- நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் இச்செலவினத்தினை ஏற்கனவே மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பல்லூடகப் பயிற்சி கணக்கு தலைப்பான IFHRMS த.தொ.கு. 2235-02-101-MJ-30901 என்ற கணக்கு தலைப்பில் இருந்து IFHRMS- 2235 - 02 - 101 - CO - 37201 என்ற கணக்கு தலைப்பின்கீழ் மறு நிதி ஒதுக்கீட்டின் மூலம் மாற்றம் செய்து ஆணை வழங்குமாறும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று, அரசு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் ஏனைய அரசு தேர்வாணையங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் மாற்றுத்திறனாளிகள் அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்று வேலைவாய்ப்பு பெறும் வகையில், இவ்வாண்டில் 200 மாற்றுத்திறனாளிகளுக்கு உணவு மற்றும் தங்கும் விடுதி வசதியுடன் கூடிய சிறப்பு பயிற்சி வகுப்பினை முதற்கட்டமாக சென்னை மயிலாப்பூர் சி.எஸ்.ஐ. காது கேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்குவதற்கு தேவைப்படும் தொகையான ரூ.12,90,000/-னை (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) பின்வருமாறு ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | செலவின விவரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | உணவூட்டு மானியம்<br>(100 நபர்கள் x ரூ.1400 / மாதத்திற்கு x 3 மாதம் x 2 கட்டம்) | 8,40,000 |
| 2. | பயிற்சி புத்தக கையேடு<br>(200 நபர்கள் x ரூ.1500) | 3,00,000 |
| 3. | கட்டட வாடகை<br>(ரூ.20,000 x 6 மாதம்) | 1,20,000 |
| 4. | இதர செலவினம்<br>(ரூ.5,000 x 6 மாதம்) | 30,000 |
| | மொத்தம் | 12,90,000 |

Padasalai.Net

4. மேலே பத்தி 3 இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவையான தொகை மானிய கோரிக்கை எண் 52-02 இல் IFHRMS த.தொ.கு. 2235-02-101-MJ-30901 என்ற கணக்கு தலைப்பில் இருந்து IFHRMS- 2235 - 02 - 101 - CO - 37201 என்ற கணக்கு தலைப்பின்கீழ் மறு நிதி ஒதுக்கீடு செய்வதன் மூலம் வழங்கப்படும்.

5. மேலே பத்தி -3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

"2235-சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் - 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - CO - மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத்திட்டம் - 372 - பயிற்சி - 01 - பயிற்சி" (IFHRMS - த.தொ.கு. 2235-02-101-CO-37201)

6. மேலே பத்தி 3 இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.12,90,000/-, ஏற்கனவே மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பல்லூடகப் பயிற்சி கணக்கு தலைப்பான IFHRMS த.தொ.கு. 2235-02-101-MJ-30901 என்ற கணக்கு தலைப்பில் இருந்து IFHRMS- 2235 - 02 - 101 - CO - 37201 என்ற கணக்கு தலைப்பின்கீழ் மறு நிதி ஒதுக்கீடு (Re-Appropriation) செய்வதன் மூலம் வழங்கப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3 இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3 இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவினை தவறாது நிதித் (சமூக நலம்) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிரிவு அலுவலர்/ அரசு சார்புச் செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண்.984, நாள் 20.09.2024-ன் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.0873 (எண்ணூற்று எழுபத்து மூன்று) (IFHRMS ASL No.2024090873)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிஜி தாமஸ் வைத்யன்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்,
சென்னை-05.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்,
சென்னை-35.

Padasalai.Net

அரசு செயலாளர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை–09.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
சென்னை–35.

**நகல்:–**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் (நிதி (ம) மவமே) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–09.
தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், சென்னை – 09.
அரசு முதன்மை செயலாளரின், முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
நிதித் துறை, சென்னை–09.
நிதி (ச.ந./வ.செ. பொது I&II/வ.வ.–I) துறை, சென்னை–09.
அரசு செயலரின் தனிச் செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
மாற்றுத்திறனாளிகள் நலத் (பட்டியல்) துறை, சென்னை–09.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
20/9/24
20/09/2024

Padasalai.Net